<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண்.389/2019**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
<u>வாக்குமூலம் – வா.சா.1</u>

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கன்னிமுத்து | மதம் | : | |
| த/க/பெ. | : | தொழில் | : | |
| கிராமம் | : | வயது | : | |
| தாலுகா | : | நாள் | : | 09.12.2024 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024 ஆண்டு டிசம்பர் 09 ம் நாள் சாட்சியம்.

---

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. கவர் வாய்க்கால் எனக்கு பாத்தியப்பட்டது எனக் விளம்புகை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்வில்லை என்றால், கவர் வாய்க்காலை அழிக்கக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்குண்டான பாசனக் கவர் வாய்க்காலை பிரதிவாதிகள் அழிக்கக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன்என்றால், ஆமாம். கவர் வாய்க்காலின் உரிமை மூலமே பிரச்சனையில் உள்ளதால், அது குறித்து நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால், சரியல்ல.

2. உரிமை மூலம் குறித்து விளம்புகை கோராமல் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும கோரியுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. எனது பூமியை ஒட்டி மேல்புறமாக 3, 4 பிரதிவாதிகளின் பூமி உள்ளது என்றால், ஆமாம். 3, 4 பிரதிவாதிகளின் பூமியை ஒட்டி மேல்புறமாக 1, 2 பிரதிவாதிகள் பூமி உள்ளது என்றால், ஆமாம். மாதிரி வரைபடத்தில் 3, 4

பிரதிவாதிகளின் பூமிக்கு மேல்புறத்தில் வடபுறமாகவும், 1, 2 பிரதிவாதிகள் பூமி எனது பூமிக்கு மேல்புறத்தில் தென்புறமாக அமைந்துள்ளதாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம், ஆனால் அது தவறு, எனது பூமிக்கு மேல்புறமாக 3, 4 பிரதிவாதிகள் உள்ளது, அதற்கு மேல்புறமாக 1, 2 பிரதிவாதிகள் பூமி உள்ளது. அதனால், வா.சா.ஆ.8 ஆவணம் தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அது செல்லதக்கதல்ல என்றால், சரியல்ல.

3. 3, 4 பிரதிவாதிகள் வழக்கிற்கு பின்னிட்டு தான் மனு தாக்கல் செய்து வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால், ஆமாம். 3, 4 பிரதிவாதிகள் பூமி எனது பூமிக்கு மேல்புறமாக உள்ளது என 1, 2 பிரதிவாதிகள் விவரப்பத்திரிக்கையில் சொன்ன பின்னர் தான் மனு தாக்கல் செய்து சேர்த்துள்ளோம் என்றால், ஆமாம். வா.சா.ஆ.8 வரைபடத்தை திருத்தம் செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.8 வரைபடத்தில் உள்ளது போல் பூமி இல்லாததால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

4. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால், ஆமாம். ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்ட போது பிரதிவாதிகள் அங்கில்லை, ஒருதலைபட்ச உத்தரவின் பேரில் தான் வழக்கு சொத்து பார்வையிடப்பட்டது என்றால், சரியல்ல. ஆணையர் வரைபடத்திலும், 1, 2 பிரதிவாதிகள் பூமி தென்புறமாகவும், 3, 4 பிரதிவாதிகளின் பூமி வடபுறமாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றால், சரியல்ல.

5. நீதிமன்ற ஆணையருக்கு வாதி வழக்கறிஞரின் அலுவலத்தில் வைத்து ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை தயார் செய்து கொடுத்ததால் தான் வழக்குரையில் தவறாக தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தை போலவே ஆணையரின் வரைபடமும் தவறாக உள்ளது என்றால், சரியல்ல. நீதிமன்ற ஆணையரை நாங்கள் வழக்கு சொத்திற்கு அழைத்து செல்லவில்லை, நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிடவில்லை என்றால், சரியல்ல.

6. நீதிமன்ற ஆணையரின் வரைபடத்திற்கு பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. செல்லாத ஆணையர் அறிக்கையின் அடிப்படையில் எனக்கு தீர்வு எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. 1, 3, 4 பிரதிவாதிகளின் பூமிக்கு எவ்வாறு தண்ணீர் பாய்கிறது என எனது வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால், கொப்பு வாய்க்காலில் இருந்து பாய்கிறது. மேற்படி விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால், சரியல்ல.

7. எனது பூமிக்கு தென்புறமாக உள்ள அரசு கிளை வாய்க்கால் மூலமாக தான், 1, 3, 4 பிரதிவாதிகள் தண்ணீர் பாய்த்துக் கொள்கிறார்கள் என்றால், ஆமாம். எனக்கு கிழபுறமாக ஒரு நாடார் பூமியும், அதற்கு கிழபுறமாக சிவகாமி பூமியும், அதற்கு கிழபுறமாக ஒரு புது வீட்டுக்காரர் பூமியும் உள்ளது என்றால், எனது பூமிக்கு கிழபுறமாக நாடார் பூமி உள்ளது, மற்றவை ஒரு கி.மீ தொலைவில் உள்ளது. மேற்படி பூமிகளுக்கு அரசு கிளை வாய்க்காலின் மூலமாக தான் தண்ணீர் பாய்கிறது என்றால், ஆமாம்.

8. அரசு கிளை வாய்க்காலின் வடபுறமாக ஒட்டி உள்ள ஒரு சின்ன கிளை வாய்க்காலைத் தான் நான் கேட்கிறேன் என்றால், ஆமாம், அழிக்கக்கூடாது என

கோருகிறேன். எனக்கு மேபுறம் உள்ள பூமிகளுக்கும், கிழபுறம் உள்ள பூமிகளுக்கும் அரசு கிளை வாய்க்காலின் வழியாக தான் தண்ணீர் பாய்கிறது என்றும், நான் பிரதிவாதிகளின் மீது வன்மம் கொண்டு அவர்கள் பூமிக்குள் கூடுதலாக ஒரு கவர் வாய்க்கால் கோருகிறேன் என்றால், சரியல்ல. அமராவதி ஆற்று பாசனமாக தாராபுரம் வடக்கு கரைவழி ஆண்டுக்கு ஒரு போகம் தான் பாசனம் கிடைக்கிறது.

9. அதில் நானும், பிரதிவாதிகளும் ஒரு போகம் தான் நெல்விலைவிக்கிறோம் என்றால், ஆமாம். அக்டோபர் மாதம் வாய்க்காலில் தண்ணீர் வர தொடங்கி பிப்ரவரி மாதம் நெற்பயிர் அறுவடை செய்யப்பட்டு விடும் என்றால், ஆமாம். வாய்க்காலில் தண்ணீர் சென்று கொண்டிருக்கும் போது தான் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரினேன் என்றால், இல்லை தண்ணீர் இல்லாத போது தான் நியமனம் கோரினேன். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட போது தண்ணீர் இருந்தது என்றால், தண்ணீர் இல்லை.

10. தற்போது கிளை வாய்க்காலில் தண்ணீர் ஓடிக்கொண்டு தான் உள்ளது. பூமிக்கு நெல் அறுவடை செய்த பிறகு எனது பூமியில் உள்ள கிணற்று பாசனத்தின் மூலம் மற்ற பயிர்கள் பயிரிடுவேன். எனது பூமியில் இலவச மின் இணைப்புடன் கிணறு உள்ளது என்றால், ஆமாம். பிரதிவாதிகள் பூமியில் கிணறு இல்லை என்றால், ஆமாம், ஆனால் வேறு கிணற்றிலிருந்து பைப்லைன் மூலம் தண்ணீர் பாசனம் செய்கிறார்கள். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எனது பூமியில் கிணறு உள்ளதையும், அதன் மின் இணைப்பையும் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல.

11. எனது பூமிக்கு வடபுறமாக ஒரு பெரிய வாய்க்கால் செல்கிறது என்றால், ஆமாம். எனது பூமிக்குஅரசு கிளை வாய்க்கால் மூலம் தான் பாசனம் உள்ளது, கவர் வாய்க்கால் பாசனம் இல்லை என்றால், சரியல்ல. நான் கோரும் 5 லிங்ஸ் அகலத்தில் பிரதிவாதிகள் பூமியில் தெற்கோட்டில் வருவதாக சொல்லும் கவர் வாய்க்கால் நிலையில் இல்லை என்றால், தவறு, நிலையில் உள்ளது. நான் ஆட்களை பயன்படுத்தி புதிதாக பிரதிவாதிகள் பூமியில் வாய்க்கால் அமைத்துள்ளேன் என்றால், இல்லை. 5 லிங்ஸ் அகலம் எத்தனை அடி என எனக்கு தெரியாது.

12. 5 லிங்ஸ் அகல கவர் வாய்க்காலில் தண்ணீர் பாய்க்கிறேன் என கோரியுள்ளேன் என்றால், ஆமாம். எனக்கு தென்புறம் உள்ள அரசு கிளை வாய்க்கால் மூலம் தான் அனைவருக்குமே பாசனம் யாருக்கும் தனிக்கவர் வாய்க்கால் இல்லை என்றால், தவறு, தனிக்கவர் வாய்க்கால் உள்ளது. அரசு கிளை வாய்க்காலுக்கு தென்புறத்தில் 1ம் பிரதிவாதியின் பூமி உள்ளது என்றால், ஆமாம். அரசு கிளை வாய்க்காலை தாண்டி தன்னுடைய பூமிக்கு செல்வதற்கு 1ம் பிரதிவாதியை நான் தடுத்துவிட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

13. கரை வழிக்குள் ஒருவர் பூமி வழியாக தான் மற்றொருவர் பூமிக்குபயிர் அறுவடை செய்ய செல்ல முடியும் என்றால், ஆமாம். கவர் வாய்க்காலுக்கு தென்புறமாக ஒரு முனியப்பன் என்பவரின் பூமிஉள்ளது என்றால், ஆமாம். 1ம் பிரதிவாதியின் பூமிக்கு மேல்புறமாக ஈஸ்வரன் பூமி உள்ளது என்றால், ஆமாம். ஈஸ்வரன் பூமிக்கும், முனியப்பன் பூமிக்கும் அரசு கவர் வாய்க்கால் மூலம் தான் பாசனம் என்றால், இல்லை.ஈஸ்வரன், முனியப்பன், சிவகாமி ஆகியோருக்கு ஒரே கவர் வாய்க்கால் மூலம்

தான் பாசனம் பெறுகிறது, ஆனால் தற்போது நான் இல்லை எனபொய்யாக சாட்சியமளிக்கிறேன்என்றால், சரியல்ல, பள்ளத்திலிருந்து, மேட்டிலுள்ள அவர்கள் பூமிக்கு தண்ணீர் செல்லாது.

14. தாராபுரம் கரைவழி வடக்கு வட்டத்தில் உள்ள அனைத்து பூமிகளுக்கும், மேற்கே தண்ணீர் பாய்ந்து உபரி நீர் கிழக்கே வாய்க்காலில் சென்று அமராவதி ஆற்றில் கலக்கும் என்றால், ஆமாம். புகைப்படம் எந்த தேதியில் எந்த வருடம் எடுக்கப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் வழக்கு சொத்தின் புகைப்படங்கள் அல்ல என்றால், சரியல்ல. நான் வெளியூரிலிருந்து தாராபுரத்திற்கு குடி வந்து 45 வருடங்களாகிறது, எனது சொந்த ஊர் தாராபுரம் அல்ல. பிரதிவாதிகளின் சொந்த ஊர் தாராபுரம் என்றால், அது எனக்கு தேவையில்லை.

15. 1ம் பிரதிவாதியின் குடும்பதை தாராபுரத்துக்காரர் என்று கூப்பிடுவார்கள் என்றால், அது எனக்கு தேவையில்லை. 5 லிங்ஸ் அகலம் என்பது 7 1/2 அடி என்றால், எனக்கு தெரியாது. அரசு கிளை வாய்க்காலிற்கு அருகில் உள்ள பூமிகளுக்கு அரசு அனுமதி பெற்று தண்ணீர் எடுக்க வேண்டும் நான் சொல்கிறேன், அவ்வாறு யாரும் எடுப்பதில்லை, நான் சொல்வது தவறு என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3ன் படி நான் 2002ல் கிரையம் பெற்றேன். எனக்கு படிப்பறிவு இல்லை.

16. வா.சா.ஆ.3 ஆவணத்தில் செக்குபந்தி குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் நானே எனக்கு கவர் வாய்க்கால் பாத்தியம் எழுதிக்கொண்டேன், அதற்கு முன்னர் அந்த பூமி உரிமையாளர்களுக்கு கவர் வாய்க்கால் பாத்தியம் இல்லை என்றால், சரியல்ல, நீதிமன்ற தீர்ப்பாணையில் உள்ளது.

எனது வழக்குரையில் அசல் ஆவணங்களை தாக்கல் செய்வதாக உறுதிசெய்துவிட்டு, விசாரணையில் சான்றிட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

17. வா.சா.ஆ.3 ஆவணத்தில் முன் ஆவணமாக 1606/1981 என முன் ஆவணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், எனக்கு படிப்பறிவு இல்லை. எனக்கு சொர்ணாத்தாள் தான் சொத்தினை விற்பனை செய்தார். சொர்ணாத்தாள் 1981ல் வா.சா.ஆ.1ன் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால், ஆமாம். வா.சா.ஆ.1ல் முன் ஆவணமாக 22.04.1974ம் தேதிய ஆவண எண்.1220/1974 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், எனக்கு படிப்பறிவு இல்லை. 1220/1974 ஆவணம் தாராபுரம் சார்பதிவளார் அலுவல எண் படி, அது காங்கேயத்தில் அமைந்துள்ள சொத்து என்றும், அது 8 செண்ட் வீட்டு மனை என்றால், சரியல்ல.

18. எனக்கு மூலப்பத்திரப்படி எனக்கு வழக்கு சொத்துக்களை கிரையம் பெற உரிமையே இல்லை என்பதாலும், வழக்கு சொத்துக்கள் எனக்கு உரிமை இல்லை என்பதாலும், வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. சொர்ணாத்தாளுக்கு விற்ற குப்புசாமிக்கு மேற்படி சொத்தை விற்க உரிமை இல்லை என்றும், அதன் அடிப்படையில் சொர்ணாத்தாள் பெற்ற கிரைய ஆவணம் செல்லதக்கதல்ல என்றாலும், அதன் அடிப்படையில் நான் பெற்ற கிரைய ஆவணமும் செல்லதக்கதல்ல என்றாலும், சரியல்ல.

19. மேற்படி மூல ஆவணங்களை நான் வேண்டும் என்றேநீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் வழக்குநடத்துகிறேன் என்றால், சரியல்ல. ஆவணப்படி எனக்கு உரிமை இல்லை என்பதால் தான் நான் விளம்புகை பரிகாரம் வேண்டும் என்றே கோரவில்லை

என்றால், சரியல்ல. எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

MATHIVATHANI VANANGAMUDI

Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.11.09 18:20:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.